**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**எம்.சி.ஓ.பி. எண். 147/2024**

**எ.ம.சா. 1**

நாள்: 06.03.2026

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 06 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அபிராமி | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

முதன்மை விசாரணை:

நான் இராமநாதபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சி சொல்ல வட்டார போக்குவரத்து அலுவலர் எனக்கு அங்கீகார கடிதம் கொடுத்துள்ளார். அந்த அங்கீகாரக்கடிதம் சா.சா.ஆ.1 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தனுஷ்கோடி காவல் நிலைய குற்ற எண்.29/2023 விபத்திற்குட்பட்ட **TN 65 AK 8718 and TN 65 P 9718 வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகளை** தாக்கல் செய்கிறேன். அவை முறையே **சா.சா.ஆ.2 மற்றும் சா.சா.ஆ.3** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகின்றன.

மேற்படி **TN 65 AK 8718** என்ற மகேந்திரா பொலிரோ பிக்கப் என்ற வாகனத்தை ஓட்டிய **குகன் என்பவரது ஓட்டுநர் உரிமம் Extract** தாக்கல்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.06 15:41:32 +0530

செய்கிறேன். அது **சா.சா.ஆ.4** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி **TN 65 P 9718** என்ற டாடா ஏஸ் வாகனத்தை ஓட்டிய **உமாகணேஷ் என்பவரது ஓட்டுநர் உரிமம் Extract** தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.5** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

TN 65 AK 8718 என்ற வாகனத்தை ஓட்டிய குகன் என்பவருக்கு போக்குவரத்து வாகனம் ஓட்டுவதற்கு Badge வழங்கப்படவில்லை. மேற்படி வாகனத்திற்கான விபத்து ஆய்பு அறிக்கை சா.சா.ஆ.2 ல் சேதம் எதுவும் குறிப்பிடவில்லை. மேற்படி வாகனம் சரக்கு வாகனம் என்பதால், அதில் ஆட்கள் ஏற்றிசெல்ல அனுமதி இல்லை.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

விபத்து சமயத்தில் குகன் என்பவருக்கு இலகுரக வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் இருந்தது என்றால் சரிதான். TN 65 P 9718 என்ற வாகனத்தை ஓட்டிய உமாகணேஷ் என்பவருக்கும் இலகுரக வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் இருந்தது என்றால் சரிதான். பொதுவாக சரக்கு வாகனத்தில் பொருட்களை கொண்டு செல்லும்போது, லோடுமேன் அந்த பொருட்களுடன் அந்த வாகனத்தில் செல்வார் என்றால் சரிதான்.

சா.சா.ஆ.3, ம.சா.ஆ.17 ஆகிய TN 65 P 9718 என்ற டாடா ஏஸ் வாகனத்திற்கான விபத்து ஆய்வு அறிக்கை காலம் 12 ல் பின்பக்க கதவு சேதம் அடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரு வாகனங்கள் மோதினால்தான் அவ்வாறு சேதம் ஏற்படும் என்றால் சரிதான். அந்த வாகனம் கவிழ்ந்தால் கூட அவ்வாறு சேதம் ஏற்பட வாய்ப்புண்டு என்று சாட்சி தானாக சொல்கிறார்.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.06 15:41:36 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .